இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 16-07-2023

# நாடே எதிர்க்கும் சட்டம்!

அடுத்த உள்நாட்டுக் குழப்பத்துக்கு அடித்தளம் அமைப்பதாக இருக்கிறது பொது சிவில் சட்டம். நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாகக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாத ஒன்றிய பா.ஜ.க. அரசு, அதில் இருந்து திசை திருப்புவதற்காக, பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறது. ஏதோ இதனை நிறைவேற்றுவதன்மூலமாக இந்தியாவுக்கு மிகப்பெரிய நன்மையைச் செய்து விட்டதாக நாடகம் ஆட நினைக்கிறார்கள்.

"இந்தியாவின் ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் ஊறு விளைவிக்கும் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தும் முயற்சியைக் கைவிட வேண்டும்" என்று இந்திய சட்ட ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு நீதியரசர் ரிதுராஜ் அவஸ்திக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விரிவான கடிதத்தை எழுதி இருக்கிறார். இந்தச் சட்டத்தை எதிர்ப்பதற்கான காரணங்களை விரிவாக எடுத்துரைத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

**★ "ஒருவர், தான் விரும்பும் மதத்தைப் பின்பற்றுவதற்கும், கடைப்பிடிப்பதற்கும், பரப்புவதற்குமான உரிமையை" இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ளது. அதனை பொது சிவில் சட்டம் மீறுகிறது.**

**★ ஒரே மதத்தைப் பின்பற்றும் மக்களிடையேகூட, பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் இடத்திற்கு இடம் மற்றும் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடும் நிலையில், அவர்களிடையே ஒருமித்த கருத்தை எட்டாமல் அத்தகைய ஒப்புதல் சாத்தியமில்லை.**

**★ இந்தியாவின் 21-வது சட்ட ஆணையமும், பொது சிவில் சட்டம் விரும்பத்தக்கது அல்ல என்று கூறியுள்ளது.**

**★ பழங்குடியினர் உட்பட சிறுபான்மையினரின் தனித்துவமான மத, கலாச்சார அடையாளத்தை அழித்து, செயற்கையாக ஒரேமாதிரியான பெரும்பான்மைச் சமூகத்தை உருவாக்கு வதற்கான முயற்சி இது.**

**★ இந்தியாவின் பன்முகத் தன்மை பாதிக்கப்படும்.**

**★ பழங்குடிச் சமூகங்கள் உட்பட பல்வேறு சமூகங்களின் தனித்துவமான மரபுகள், நடைமுறைகள் மற்றும் தனிப்பட்ட சட்டங்களை மதித்துப் பாதுகாப்பது முக்கியம்.**

**★ இது மத விவகாரங்களில் ஒன்றிய அரசின் அத்துமீறலாகவே கருதப்படும்.**

**★ இந்தச் சட்டம் பல்வேறு மத சமூகங்களிடையே ஆழமான பிளவுகளையும் சமூக அமைதியின்மையையும் உருவாக்கும்.**

**★ இது முரண்பாடுகளை உருவாக்கி பகைமையை வளர்க்கக் கூடியது.**

**★ பழங்குடிச் சமூகத்தை இது அதிகமாக பாதிக்கும்.**

**★ அனைவருக்கும் பொதுவான நடைமுறையானது ஏற்றத் தாழ்வுகளை அதிகரிக்கும்.**

**★ நமது நாட்டின் பலம், அதன் பன்முகத்தன்மையில் உள்ளது. பொது சிவில் சட்டத்தின் மூலம் அதை ஒருமுகப்படுத்த முயற்சிப்பதை விட, நாம் நமது பன்முகத் தன்மையை நிலைநிறுத்திக் கொண்டாட வேண்டும்.**

- இவையே முதலமைச்சர் அனுப்பியுள்ள கடிதத்தின் முக்கிய கருத்துருக்கள் ஆகும்.

இந்தியாவின் பல்வேறு தரப்பினரும் இதே கருத்தையே சொல்லி இருக்கிறார்கள். பொது சிவில் சட்டத்தை முஸ்லீம் தனிச் சட்ட வாரியம் எதிர்த்துள்ளது. உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் கூடிய இந்த சட்ட வாரிய உறுப்பினர்கள், மத்திய சட்ட ஆணையத்துக்கு விரிவான கடிதத்தை அனுப்பி இருக்கிறார்கள்.

"சிறுபான்மையினரின் தனிச் சட்டம், மதச் சுதந்திரம் மற்றும் தனி உரிமை ஆகியவற்றில் தலையிடுவது ஒழுக்கமாகாது. சட்ட ஆணையத்தின் அறிவிப்பு தெளிவில்லாமல் இருக்கிறது. நம் நாட்டின் அரசியலமைப்புச் சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள அடையாளத்தை இழக்க நாங்கள் தயாராக இல்லை. தேசிய பாதுகாப்பு, மதநல்லிணக்கம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பேணுவதற்கு சிறுபான்மையினர் மற்றும் பழங்குடியினருக்கு அவர்களது தனிச் சட்டங்கள் உதவியாகவே உள்ளன. எனவே பொது சிவில் சட்டம் தேவையில்லாத ஒன்று" என்று முஸ்லிம் சட்ட வாரியம் கடிதம் அனுப்பி இருக்கிறது.

**சீக்கியர்கள் இதனைக் கடுமையாக எதிர்த்துள்ளார்கள். சிரோன்மணி அகாலி தளம் கட்சியின் நிர்வாகிகள் கூட்டம் டெல்லியில் நடந்துள்ளது. 'இந்துக்களில் அனைத்துப் பிரிவினருக்கும் ஒரே மாதிரியான சட்ட, விதி முறைகள் இல்லை. அப்படி இருக்கும் போது அனைத்து மதத்துக்கும் ஒரே மாதிரியான சட்டம் எதற்கு? அனைத்து மதத்தையும் ஒன்றாக்கப் பார்க்கிறார்களா?" என்று பரம்ஜித்சிங் சர்னா கேட்டுள்ளார்.**

மேகாலயா முதலமைச்சர் கான்ராட் சங்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். தேசிய மக்கள் கட்சியின் தலைவர் இவர். இவரது ஆட்சியை பா.ஜ.க. ஆதரிக்கிறது. பா.ஜ.க.வின் கூட்டணியில் இருக்கும் கட்சி இது. இவரே எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். நாங்கள் ஆதரவு தரமாட்டோம் என்றே இவர் சொல்லி இருக்கிறார்.

சட்டீஸ்கர் முதலமைச்சர் பூபேஷ் பாகேல், பொது சிவில் சட்டத்தை எதிர்த்திருக்கிறார். ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பழங்குடி அமைப்பினர் சேர்ந்து எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். ராஞ்சியில் கூடிய ஆதிவாசி சமன்வாய் சமிதி என்ற கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. "பழங்குடியினரின் உரிமைகள் அனைத்தும் பறிபோகும்" என்று இவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நாகலாந்து, மிசோரம் மாநில மக்கள் இதனை எதிர்க்கிறார்கள்.

"காசி ஹில்ஸ்" என்ற தன்னாட்சி பெற்ற மாவட்ட கவுன்சில் இதனை எதிர்த்துள்ளது. காசி சமூகத்தின் பழக்க வழக்கங்கள் பாதிக்கப்படும் என்கிறார்கள் இவர்கள். அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணையில் சிறப்புச் சலுகை பெற்றிருக்கும் சமூகம் இது.

**தி.மு.க. பொதுச் செயலாளர் மாண்புமிகு துரைமுருகன் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கருத்தே, இந்தியா முழுக்க எதிரொலிக்க வேண்டியது ஆகும்.**

**"மதங்களுக்கு இடையே பொது சிவில் சட்டம் கொண்டு வருவதற்கு முன், சாதிகளுக்கு இடையே பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வந்து சாதிய ஏற்றத் தாழ்வை சமன் செய்ய வேண்டும்" என்று சொல்லி இருக்கிறார்.**

இதைச் செய்தால் 'பொது'வை ஆதரிக்கும் அனைவரும் 'பொது'வை எதிர்க்கத் தொடங்கி விடுவார்கள்.

●●

## டெல்லியை சூழ்ந்த வெள்ளம்!

டெல்லி, ஜூலை 16 -

வட மாநிலங்களில் கடந்த சில நாட்களாக கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது. இதன் காரணமாக பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் தலைநகர் டெல்லியில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கனமழை கொட்டித்தீர்த்தது. மழை மேலும் தொடரும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கனமழை காரணமாக யமுனை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. யமுனை ஆற்றின் நீர் மட்டம் அபாய அளவை தாண்டியுள்ளது. இதன் காரணமாக தலைநகர் டெல்லியின் பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை யமுனை ஆற்றின் நீர் மட்டம் 208.66 மீட்டராக இருந்த நிலையில் அந்த அளவு தற்போது சற்று குறைந்துள்ளது. தற்போதைய நிலவரப்படி ஆற்றின்நீர் மட்டம் 207.62 மீட்டராக உள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.07.2023) தலைமைச் செயலகத்தில், ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் சந்தித்துப் பேசினார். உடன் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் செயலாளர் திருமதி லீலா நந்தன், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) சுப்ரத் மஹாபத்ர, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் திருமதி எம். ஜெயந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### மக்களைத் தேடி மருத்துவத் திட்டம் - குறைந்த வருவாய் கொண்டோர்

## மருத்துவச் செலவு பாதியாகக் குறைந்துள்ளது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவில் பெருமிதம்!

**சென்னை, ஜூலை 16–**

**குறைந்த வருவாய் கொண்டோரின் மருத்துவச் செலவை, மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் பாதியாக குறைத்துவிட்டதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில்,

கல்வியும், சுகாதாரமும்தான் நமது திராவிட மாடல் அரசாங்கத்தின் முதன்மையான இரண்டு கண்கள் என்று தெரிவித்துள்ளார். தி.மு.க. அரசு பதவியேற்றதில் இருந்து, இந்திய மாநிலங்களுக்கிடையில், வளர்ந்த நாடுகளுக்கு இணையாக, தமிழ்நாட்டை தனிச்சிறப்பாக நிலைநிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், இந்தத் துறைகளில் பல்வேறு திட்டங்களை விடாமுயற்சியுடன் செயல்படுத்திவருவதாக அவர் கூறியுள்ளார். மாநில திட்டக்குழுவின் கண்டுபிடிப்புகள் நமது திட்டங்களின் தொலைநோக்கு தன்மைக்கு சான்றாக விளங்குவதாகவும், தமிழ்நாட்டில் உள்ள குறைந்த வருமானம் பெறும் பிரிவினரிடையே மக்களைத்தேடி மருத்துவம் ஏற்படுத்தியுள்ள ஆழமான தாக்கத்தை பற்றியும் "தி இந்து" நாளேட்டில் கட்டுரை வெளியாகியுள்ளதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். திராவிட மாடல் கொள்கைகளால், தமிழ்நாட்டின் தொடர்ச்சியான வளர்ச்சிக்காக பாடுபடுவோம் என்றும் தனது ட்விட்டர் பதிவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மதுரைக்கு மற்றுமோர் சிறப்பாக-

## 'கலைஞர் நூற்றாண்டு நூலகம்' அமைத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

### 'பபாசி' கூட்டமைப்பின் சார்பில் பெ.மயிலவேலன் - முல்லை.பழனியப்பன் அறிக்கை!

*சென்னை, ஜூலை 16 -*

*மதுரைக்கு மற்றுமோர் சிறப்பாக 'கலைஞர் நூற்றாண்டு நூலகம்' அமைத்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி என பபாசி கூட்டமைப்பின் சார்பாக பெ.மயிலவேலன் மற்றும் முல்லை பழனியப்பன் ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.*

*அது வருமாறு:-*

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி கலைஞர் நூற்றாண்டை மிகச்சிறப்பாக மக்களுக்கு மிகவும் பயனுள்ள திட்டங்களுடன் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. கலைஞரின் வழியில் தமிழகத்தை உலகளவில் தலைசிறந்த மாநிலமாக உருவாக்கிக் கொண்டிருக்கின்ற மற்றும் கலைஞரின் கனவுத் திட்டமான புத்தகப் பூங்கா அமைக்க சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றிய தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு எழுத்தாளர் மற்றும் பதிப்பாளர் சார்பாக நன்றியை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.*

*திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் சால்வை, பூங்கொத்துக்குப் பதிலாக புத்தகங்களை வழங்க வேண்டும் என ஆணை பிறப்பித்து தமிழகத்தின் அறிவுப் புரட்சிக்கு வித்திட்டது போற்றுதலுக்குரியது.*

*தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் காட்சி நடத்துவதற்கு ஆணை பிறப்பித்து ஓராண்டில் 38 மாவட்டங்களில் புத்தகக் காட்சியை சீரும் சிறப்புமாக நடத்தி அனைத்து மாவட்ட மக்களிடையே அறிவுப் புரட்சி ஏற்படுத்தியது தி.மு.க. அரசின் உயரிய செயலாகும். தமிழறிஞரும் பதிப்பாளருமான தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளர் அம்சவேணி பெரியண்ணன் அவர்கள் எழுதிய நூல்களை நாட்டுடைமையாக்கியது பெண்ணிய எழுத்தாளர்களிடையே மிகப் பெரிய வரவேற்பை பெற்றுள்ளது.*

*பெரியாரின் பகுத்தறிவாலும், அண்ணாவின் முற்போக்குச் சிந்தனையாலும் கவரப்பட்ட கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தமிழகத்தை மென்மேலும் தலைநிமிரச் செய்ய அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அன்று அமைத்தார்.*

*அவரின் வழியில் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் 2,13,338 சதுர அடி பரப்பளவில் மிகப் பிரம்மாண்டமாக நிறுவியுள்ளார். இது புத்தக ஆர்வலர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகுந்த பயனை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.*

*அந்நூலகத்திற்கு மூன்றரை இலட்சம் புத்தகங்களுடன் சுமார் ரூபாய் 40 கோடிக்கு புத்தகங்களை வாங்கி பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், இளைஞர்களின் எழுச்சி நாயகர் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித்துறையில் புதிய சாதனை படைத்துக் கொண்டிருக்கின்ற அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும், இந்தியப் பதிப்பாளர் மற்றும் படைப்பாளர் சங்கம் மற்றும் பபாசியின் பதிப்பாளர் கூட்டமைப்பின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.*

### விருதுநகர் - இலுப்பையூர் கிராமத்தில்

## ரூ. 120 இலட்சம் மதிப்பில் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டுமானப் பணி!

### அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தார்!

*விருதுநகர், ஜூலை.16-*

*விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், இலுப்பையூர் கிராமத்தில், ரூ.120 இலட்சம் மதிப்பில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் 4 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 5 பயனாளிகளுக்கான மருந்து பெட்டகம், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் 1 மாணவருக்கு மூக்கு கண்ணாடி உள்ளிட்டவற்றை அமைச்சர் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:*

*தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் மூலம் மருத்துவ சேவைகள் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் செயலாற்றி வருகிறது. கடந்த ஈராண்டு ஆட்சியில் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரம் மற்றும் சேவைகள் மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது.*

*நரிக்குடி சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் மருத்துவ சேவைகளுக்காக சுமார் 10 முதல் 15 கி.மீ. தூரமுள்ள திருச்சுழி செல்ல வேண்டியுள்ளதால், இப்பகுதியில் மருத்துவ சேவை வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்ற முக்கியத்துவத்தை பல முறை வலியுறுத்தி, தற்போது இலுப்பையூரில் ரூ.120 இலட்சம் மதிப்பில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.*

*இந்த புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தில் பிரசவ அறை, பிரசவ வார்டு, மருத்துவ அலுவலர் அறை, ஊசி போடும் அறை, மருந்து கட்டும் அறை, அவசர சிகிச்சை வார்டு, ஆய்வகம், மருந்தகம், தொற்று நோய் சிகிச்சை பிரிவு உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 3250 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட உள்ளது என நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் செல்வராஜன், துணை இயக்குநர்(சுகாதாரப்பணிகள்) மரு.யசோதாமணி(விருதுநகர்), அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் கணேசன், திருச்சுழி ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் பொன்னுத்தம்பி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாபா போஸ், வட்டாட்சியர், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட அரசு அலுவலர்கள், மருத்துவப் பணியாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.*



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம், இலுப்பையூர் கிராமத்தில், ரூ.120 இலட்சம் மதிப்பில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (14.07.2023) அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்து 4 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கினார்.